# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2396/56 - 2024 අගෝස්තු මස 09 වැනි සිකුරාදා - 2024.08.09

**2396/56 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 5/83* (III)

**1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும். 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த அமரவீர**(பா.உ.),
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக்
கைத்தொழில்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூலை 31.*


1A – PG6819 – 504 (2024/08)



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் பொதுவான மற்றும் உள்நாட்டு பீடைகொல்லியொன்றுக்கு உரிமமளிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், பின்வரும் முறையிலான இரு தவணைகளில் செலுத்தப்படற்பாலதான இரண்டு இலட்சம் ரூபா கட்டணமொன்று சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் : -

(அ) திருப்பிச் செலுத்தப்படற்பாலதல்லாத கோப்பிடுதல் கட்டணமொன்றாக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ; அத்துடன்

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பதிவுக்கட்டணமொன்றாக ஐம்பதாயிரம் ரூபா.

(2) சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் மட்டுப்படுத்தப்பட்ட பீடைகொல்லியொன்றுக்கு உரிமமளிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், பின்வரும் முறையிலான இரு தவணைகளில் செலுத்தப்படற்பாலதான நாற்பதாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் : -

(அ) திருப்பிச் செலுத்தப்படற்பாலதல்லாத கோப்பிடுதல் கட்டணமொன்றாக இருபத்தையாயிரம் ரூபா ; அத்துடன்

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பதிவுக்கட்டணமொன்றாக பதினையாயிரம் ரூபா.

(3) (அ) சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழான பீடை கொல்லியொன்றுக்கு உரிமமளிப்பதற்கான விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுவதற்கு எதிரான ; அல்லது

(ஆ) சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின், சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழான இல்லாதொழித்தலுக்கு, இடைநிறுத்தலுக்கு அல்லது திரிபுபடுத்தலுக்கு எதிரான,

மேன்முறையீடு ஒவ்வொன்றும், ஐம்பதாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேரத்தனுப்பப்படுதல் வேண்டும்.

3. (1) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான பீடைகொல்லியொன்று தொடர்பில் வழங்கப்பட்ட உரிமமொன்றைப் புதுப்பித்தற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) பீடைகொல்லியொன்றைப் பதிவுசெய்வதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள் அல்லது ஆறாண்டுகள் முடிவடைந்த பின்னர் தனது உரிமத்தைப் புதுப்பித்தற்கு உட்கருதுகின்ற எவரேனும் உரிமம் வைத்திருப்பாளர், அரசாங்க ஆராய்ச்சி நிறுவகமொன்றிலிருந்து உயிரி - செயற்றிறன் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்வதற்கென எழுபத்தையாயிரம் ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

(3) உணவுப் பயிர்களுக்கான பீடைகொல்லியொன்றைப் பதிவுசெய்வதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், சட்டத்தின் 20 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக வீழ்படிவு மட்டங்கள் பற்றிய சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்வதற்கென இரண்டு இலட்சம் ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

4. பொதுவான, உள்நாட்டு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பீடைகொல்லிகள் தொடர்பில் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றைத் திருத்துவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், ஐயாயிரம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

5. ஏதேனும்பதிவுசெய்யப்பட்ட பீடைகொல்லியை இறக்குமதி செய்வதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், அனுமதிப்பத்திரமொன்றுக்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணமொன்றாக இரண்டாயிரம் ரூபாவைச் செலுத்தவதன் மீது சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் பதிவாளரின் எழுத்திலான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. ஐந்தாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட எழுத்திலான அங்கீகாரத்தை நீடிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், ஐந்நூறு ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

7.(1) சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் முதற்றடவையாக பீடைகொல்லியின் உரிமமொன்றுக்கு விண்ணப்பிக்கும்போது, ஒவ்வொரு விண்ணப்பமும் மூன்றாம் திறத்தவர்களையும் சுற்றாடலையும் மற்றும் வனசீவராசி வளங்களையும் பாதுகாப்பதற்கான குறித்தசில பதார்த்தங்களின் சந்தைப்படுத்தலில் அல்லது விநியோகிப்பில் தீங்கெதுவும் இடம்பெறாதிருப்பதனைச் சான்றுப்படுத்துகின்ற பதிவாளரின் கள மதிப்பீடொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உபஒழுங்குவிதியின்கீழான கள மதிப்பீட்டுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், பின்வரும் முறையிலான இரு தவணைகளில் செலுத்தப்படற்பாலதான இரண்டு இலட்சம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் -

(அ) திருப்பிச்செலுத்தப்படற்பாலதல்லாத கோப்பிடுதல் கட்டணமொன்றாக ஒரு இலட்சம் ரூபா ; அத்துடன்

(ஆ) கள மதிப்பீடு நிறைவேற்றப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல், பதிவுக்கட்டணமொன்றாக ஒரு இலட்சம் ரூபா ;

ஆயின், மட்டுப்படுத்தப்பட்ட பீடைகொல்லியின் எவரேனும் இறக்குமதியாளர் பீடைகொல்லி தொழில்நுட்ப மற்றும் மதியுரைக் குழுவின் அங்கீகாரத்துக்கமைய, (1) ஆம் உப ஒழுங்குவிதியின்கீழான கள மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதிலிருந்து விலக்களிக்கப்படலாம்.

8. நிரல் I இல் தரப்பட்டுள்ள பரிசோதனைகள் தொடர்பில் கமத்தொழில் திணைக்களத்தின் மத்திய கமத்தொழில் சார் ஆராய்ச்சி நிறுவகத்தின் இரசாயனவியலாளருக்கு பகுப்பாய்வுச் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்ள உட்கருதுகின்ற எவரேனும் பீடைகொல்லி இறக்குமதியாளர், உற்பத்தியாளர், ஆக்குநர் அல்லது பொதியிடுநர், அத்தகைய பரிசோதனையிடலுக்காக நிரல் II இல் தரப்பட்டுள்ள நேரொத்த கட்டணங்களைச் செலுத்துவதன்மீது விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும் -

| நிரல் I | நிரல் II |
|---|---|
| அடர்த்தியைப் பரிசோதித்தல் | ரூபா 500.00 |
| தொடர்ச்சியான நுரையைப் பரிசோதித்தல் | ரூபா 500.00 |
| ஈரப்பதனைப் பரிசோதித்தல் | ரூபா 500.00 |
| PH ஐப் பரிசோதித்தல் | ரூபா 500.00 |
| குழம்பின் நிலைத்தன்மையைப் பரிசோதித்தல் | ரூபா 500.00 |
| செயற்படுநிலையிலுள்ள மூலப்பொருள் உள்ளடக்கத்தைப் பரிசோதித்தல் | ரூபா 7000.00 |
| தூய்மையற்ற உள்ளடக்கத்தைப் பரிசோதித்தல் | ரூபா 10,000.00 |
| கனதியான உலோக உள்ளடக்கத்தைப் பரிசோதித்தல் | ரூபா 8000.00 |

9. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய

“சட்டம்” என்பது 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம் எனப் பொருள்படும் ;

“உயிரி - செயற்றிறன் சான்றிதழ்” என்பது, பீடைகளைக் கட்டுப்படுத்துவதில் பீடைகொல்லியொன்றின் செயற்றிறனைக் குறித்துக்காட்டி இயைபான அரசாங்க ஆராய்ச்சி நிறுவகமொன்றினால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் எனப் பொருள்படும் ;

“அரசாங்க ஆராய்ச்சி நிறுவகம்” என்பது, பயிர்களின் ஆராய்ச்சிக்கும் விருத்திக்குமென கமத்தொழில் திணைக்களத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவகம் எனப் பொருள்படும் ;

“பதிவாளர்” என்பது, சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பீடைகொல்லிகள் பதிவாளர் எனப் பொருள்படும்.

10. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்துமூன்றாம் ஆண்டு செத்தெம்பர் 22 ஆந்தேதிய 263/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி, இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

EOG 08 - 0119

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.